பக்கங்கள் 26

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 07 புதன்கிழமை 21.05.2025 அதிர்வு 290

## ரி - 56 ரக துப்பாக்கியுடன் பெண்ணொருவர் கைது!



கொழும்பு, வெள்ள வத்தை பொலிஸ் பிரி வுக்குட்படுத்தப்பட்ட ஹேவ்லாக் டவுன் பகுதி யில் அமைந்துள்ள ஆடம்பர தொடர் மாடி குடியிருப்புக்குள் 04

# 8 மாதங்களில் 52 பேர் சுட்டுக்கொலை!

## தடுத்து நிறுத்த அரசு தவறிவிட்டது என்று சஜித் குற்றச்சாட்டு

"கடந்த 8 மாதங்களில் இலங் கையின் பல்வேறு பகுதிகளில் 79 துப்பாக்கிச்சூட்டுச் சம்ப வங்கள் பதிவாகியுள்ளன. இதில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து நடைபெறும் இந்த வன்முறைகள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுக்க அநுர அரசு தவறிவிட்டது."

– இவ்வாறு நாடாளுமன் றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் நேற்று சபையில் கேள்விகளை எழுப்பிய அவர், அரசின் செயற்பாடுகள் 03




# வர்த்தமானியை நிறுத்தினால் காணிப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதில் தாமதம் ஏற்படும்

## இப்படிக் காரணம் கூறுகின்றது அநுர அரசு

"வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்சினைகளுக் குத் தீர்வு கண்டு உரியவர் களுக்குக் காணி உரித்துக் களை வழங்குவதற்கே அரசு முயற்சிக்கின்றதே தவிர, அங்குள்ள காணி களை எந்த வகையிலும் கையகப் படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக் காது. வர்த்தமானியை நிறுத்தினால் வடக்கு மக் களுக்குக் காணிப் பிரச்சி னை களுக்குத் தீர்வு 03



# வடக்கு, கிழக்கு எதிரணி எம்.பிக்களை வெள்ளியன்று சந்திக்கின்றார் பிரதமர்

## காணி பற்றிய வர்த்தமானி குறித்து கலந்துரையாடப்படும்



வடக்கு மாகாணத்திலுள்ள காணிகள் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் குறித்து எழுந்திருக்கும் பிணக்குகள் தொடர்பில் கலந்துரையாடும் நோக்கில் பிரதமர் ஹறிணி அமரசூரியவுக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்து வப்படுத்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை (23) நடைபெறவுள்ளது.

காணி நிர்ணய கட்டளைச் 04




நாடாளுமன்றத் தேர்தலில் பெருவெற்றியீட்டிய தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கணிசமான வீழ்ச் சியை எதிர்கொண்டது. ஆயி னும், 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற மாதிரி இந்த முடிவு பற்றி கருத்து தெரிவித்தார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

"உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் நாடாளுமன் றத் தேர்தல்களில் பிரதிபலித்தி ருந்தாலும், தேசிய மக்கள் சக்தி 122 இடங்களைப் பெற்றிருக்கும். ஆகவே, தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய அந்த ஆணை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் மூலம் ரத்துச் செய் யப்படவில்லை" என்று 03



# வடக்கு மாகாண சபையின் பிரதம செயலராக தனுஜா

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளராகதனுஜா முருகேசன் நேற்றைய தினம் ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் கடந்த 2025-5-04 அன்று ஓய்வு பெற்றுச் சென்றமையால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கே தற்போது தனுஜா முருகேசன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச் சேவை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளராக பணியாற்றிய தனுஜா முருகேசன் 2026ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை சேவைக்காலம் இருக்கின்றபோதே நேற்றைய தினம் வடக்கு மாகாண பிரதம செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தில் உள்ள அதிகாரிகளில் இலங்கையிலேயே இரண்டாவது மூத்த அதிகாரியாக இவர் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# வீதி பாதுகாப்பு தேசிய சபையை ஆணைக்குழுவாக மாற்ற தீர்மானம்

வீதி பாதுகாப்பு தேசிய சபையை ஆணைக்குழுவாக மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீதி பாதுகாப்பு தொடர்பான சட்டத்தை அமுல்படுத்தவும் சட்டத்தை மீறும் நபர்களுக்கு எதிராக இதனூடாக நடவடிக்கை எடுக்க முடியுமெனவும் வீதி பாதுகாப்பு தேசிய சபையின் தலைவர் குமார் ஜயரத்ன தெரிவித்தார்.

வீதி பாதுகாப்பு தேசிய சபையை ஆணைக்குழுவாக மாற்றும் போது தற்போதுள்ள பணிப்பாளர் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 இலிருந்து 5ஆக குறைக்கப்படும்.

நீதிக் கட்டமைப்பிற்குள் சட்டரீதியான கொள்கைகளை வகுப்பதன் மூலம் வீதி பாதுகாப்பிற்காக வினைத்திறனான நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனவும் தேசிய சபையின் தலைவர் குமார் ஜயரத்ன தெரிவித்தார்.

# உப்பு இறக்குமதிக்கான வர்த்தமானி வெளியீடு

உப்பு இறக்குமதிக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி வரை உப்பு இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கும் வகையில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக இறக்குமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் உபுல்மலீ பிரேமதிலக்க தெரிவித்தார்.

உப்பு இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் தேவையில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அனுமதி பெற்ற எந்தவொரு இறக்குமதியாளருக்கும் உப்பு இறக்குமதி செய்வதற்கு முடியும் என உபுல்மலீ பிரேமதிலக்க கூறினார்.




அத்துடன் அயடீன் கலக்காத மற்றும் அயடீன் கலந்த உப்பை இறக்குமதி செய்ய முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜே.வி.பியின் 60 ஆவது ஆண்டு விழாவில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க சமாளிப்பு விளக்கங்களைக் கூறிய போதிலும், தேர்தல்கள் பற்றிய வரலாற்று முறைகள், பதிவுகள் ஜனாதிபதியின் இந்தக் கருத்து அல்லது தகவல் பிழை எனச் சுட்டுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் தேசிய மக்கள் சக்தி 43.26 வீத வாக்குகளைப் பெற்றது. இந்த வாக்குகளுக்கு ஜனாதிபதி கூறியபடி நாடாளுமன்றத் தேர்தலில் 122 ஆசனங்களாவது கிடைத்திருக்குமா என்பதுதான் கேள்வி. ஒப்பிடக்கூடிய முன்னுதாரணங்களைப் பார்க்கும்போது -

✯ 2015 ஆம் ஆண்டில், சிறிசேன மற்றும் ராஜபக்ஷவைக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி 42.38 வீத வாக்குகளைப் பெற்றபோது, ஆக 95 நாடாளுமன்ற ஆசனங்களை மட்டுமே கிடைத்தன.

✯அதே தேர்தலில் 45.66 வீத வாக்குகளைப் பெற்ற ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 இடங்களையே ஈட்ட முடிந்தது.

.✯ சந்திரிகாவின் மக்கள் முன்னணி 1994 இல் 48.94 வீத வாக்குகளைப் பெற்றபோது அதற்கு 105 இடங்களே கிடைத்தன.

✯ 2000 ஆம் ஆண்டில் அதே 48.94 சதவீதத்துடன் கூட, சந்திரிகா 107 இடங்களை மட்டுமே பெற்றார்.

இந்தத் தரநிலைகளின்படி, அநுரவின் தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றத் தேர்தலில் 43.26 வீத வாக்குகளைப் பெற்றிருக்குமானால் அதற்கு 95 முதல் 100 இடங்களே கிடைத்திருக்கும். அவர் குறிப்பிட்டிருந்தமை போல இந்த 43.26 வீத வாக்குகளுக்கு 122 நாடாளுமன்ற இடங்கள் கிடைத்திருக்காது.

ஆகவே உள்ளூராட்சி தேர்தலில் அவரது தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த வாக்கு இழப்பு என்பது நாடாளுமன்றத் தேர்தலில் அவரது தரப்புக்கு மக்கள் கொடுத்த ஆணையை அவர்கள் வாபஸ் பெற்று விட்டார்கள் என்பதையே உறுதிப்படுத்துகிறது என தேர்தல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

எதிரணி அரசியல் கட்சிகள் கையில் எடுக்க வேண்டிய அரசியல் ஆயுதப் புள்ளிவிவரம் இதற்குள் புதைந்து கிடக்கின்றது.

✯ ✯ ✯

தங்க ஆபரணங்கள், தங்கப் பல், தங்கத்திலான கோப்பை, கரண்டி, தங்க ஜரிகை வைத்த உடைகள் பற்றி எல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். தங்க தகடு பூட்டப்பட்ட தேர், தங்க முலாம் பூசப்பட்ட கோயில் கர்ப்பக் கிரகம் பற்றி எல்லாம் அறிந்திருக்கிறோம்.



இப்போது தங்க நிறத்தில் அமைந்த அல்லது தங்க உலோகத்தினாலான ரி - 56 ரகத் துப்பாக்கி ஒன்று பற்றிய செய்தி வெளியாகி இருக்கிறது. அதுவும் கொழும்பில் தங்க பிளேட் போட்ட இந்த ஆயுதம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

கொழும்பில் உள்ள ஹவ்லொக் சிற்றி குடியிருப்பு வளாகத்தில் உள்ள ஒரு சொகுசு அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து, பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் இரகசியத் தகவலைத் தொடர்ந்து, சந்தேகத்திற்குரிய இந்த ரி - 56 துப்பாக்கி மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

67 வயதுடைய பெண் ஒருவர் தனது வாகனத்தில் சந்தேகத்திற்கிடமான தோற்றமுடைய பையை வைப்பதை அதிகாரி கவனித்தமையை அடுத்து, எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

தகவலைப் பெற்றவுடன், வெள்ளவத்தை பொலிஸார் அந்த வளாகத்தில் சோதனை நடத்தினர்.

பெண்ணின் காரின் பின் இருக்கையில் இருந்த பையில் தங்க நிற ஆயுதம் ஒன்று இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். அந்த ஆயுதம் ரி - 56 ஆயுதம் என்று நம்பப்படுகிறது. இருப்பினும் அதன் நம்பகத்தன்மையைப் பொலிஸார் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

அந்தத் துப்பாக்கி உண்மையானதா என்பதை தீர்மானிக்கவும், அது குடியிருப்பாளரின் வசம் எப்படி வந்தது என்பதைக் கண்டறியவும் விசாரணைகள் நடந்து வருகின்றன எனப் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்த இயந்திரத் துப்பாக்கியில் பயன்படுத்தப்படும் தோட்டாக்களும் தங்கமோ என்னவோ தெரியவில்லை. தோட்டாக்களும் தங்கம் என்றால், அந்தத் தங்கத் தோட்டாக்களைச் சுவீகரிப்பதற்காவது இரண்டு சூடு அந்த இயந்திரத் துப்பாக்கியால் வாங்கிப் பார்த்தால் என்ன என்று எண்ணத் தோன்றுகின்றது.

## 8 மாதங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் பின்வரும் முக்கிய விடயங்களை முன்வைத்தார்.

துப்பாக்கிச்சூடுகள் தொடர்பில் அரசின் திட்டம் எங்கே?

நாட்டளவில் இடம்பெறும் துப்பாக்கிச்சூடுகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான அரசின் தற்போதைய வேலைத் திட்டம் போதுமானதா என்பதையும், அது இல்லை என்றால், தடுப்பதற்கான புதிய திட்டத்தைச் சபையில் முன்வைக்குமாறும் கேள்வி எழுப்பப்பட்டது.

**தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளா தார தாக்கம்**

வன்முறை அதிகரிப்பது தேசிய பாதுகாப்பைப் பாதிப்பதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் அச்சுறுத்தும். இதற்காக அரசு எவ்வளவு கவனம் செலுத்தியுள்ளது என்றும், இதற்கான நடவடிக்கைகள் எவை என்பதைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள் எப்பட்டது.

**போதைப்பொருள் மற்றும் அதன் தாக்கம்**

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மத்தியில் ஏற்படும் மோதல்களில் பொதுமக்கள் பலியாகின்றனர். இதன் அடிப்படையில், அரசின் திட்டம் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவித்து, அதற்கான மாற்றுத் தீர்வுகள் குறித்து விளக்கம றாறு வலியுறுத்தப்பட்டது.

**அரசியல்வாதிகள் மீது அச்சுறுத்தல்கள்**

நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளின் நிலை என்ன? என்பன குறித்து விளக்கம் கோரப்பட்டது.

இந்த விடயங்களில் தெளிவான பதில் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

## வர்த்தமானியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதிலேயே தாமதம் ஏற்படும்."

– இவ்வாறு விவசாயம், கால்நடைகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.

காணி தொடர்பில் அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலொன்று தொடர்பாக கடந்த 8ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் நிலையியல் கட்டளை 23ஃ2 இன் கீழ் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நேற்று செவ்வாய்க்கிழமை (20) பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

சிறீதரன் எம்.பி தனது கேள்வியில், "கடந்த மார்ச் 28ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களை மையப்படுத்திய வகையில் அங்குள்ள பெருமளவான ஏக்கர் காணிகளை அளவீடு செய்யவும், அந்தக் காணிகளின் உரிமையாளர்களைப் பதிவு செய்யுமாறும் இல்லையேல் அந்தக் காணிகளைக் கையகப்படுத்துவது தொடர்பாகவும் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதனை மீளப் பெறுவீர்களா?" – என்று கேட்டிருந்தார்.

இது தொடர்பில் அமைச்சர் லால் காந்த தொடர்ந்து பதிலளிக்கையில்,

"காணிகளைக் கையகப்படுத்துவதற்காக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை. காணி தீர்வுக்கான திணைக்களத்தால் காணி தீர்த்தல் தொடர்பன வர்த்தமானியே வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், ஒருபோதும் காணிகளைக் கையகப்படுத்துவதற்கான வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு யுத்தம் காரணமாக காணிப் பிரச்சினைகள் ஏற்பட்டதால் அந்தக் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டியிருந்தது.

குறிப்பாக மற்றைய மாகாணங்களில் நூறு வீதமும், 98 வீதமும் தீர்க்கப்பட்டுள்ள நிலையில் வடக்கில் 30.36 வீதமே தீர்க்கப்பட்டுள்ளது.

கிழக்கில் 87.4 வீதமே தீர்க்கப்பட்டுள்ளது. யுத்தம் மற்றும் பல்வேறு காரணங்களால் சிலர் வெளிநாடு சென்றுள்ளதாலும், மேலும் சிலர் வேறு இடங்களில் இருப்பதால் ஆவணங்கள் காணாமல்போயிருக்கலாம்.

ஆனால், ஒருபோதும் காணிகளைக் கையகப்படுத்தும் நடவடிக்கை இடம்பெறவில்லை. தமக்கு முடிந்த வரையில் எந்த முறையிலாவது தமது காணிகளை உறுதிப்படுத்தக் கூடியவர்களுக்கு உரித்துக்களை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

பிரதமரின் தலைமையில் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. இதன்போது நீங்கள் முன்வைக்கும் கோரிக்கைகளை ஆராயவும் தயார்.

ஆனால், காணிகள் கையகப்படுத்தப்படாது. இது நாடு முழுவதும் முன்னெடுக்கும் சாதாரண செயற்பாடாகும். இது தொடர்பில் ஏற்பட்ட நெருக்கடிகளால் தீர்வு காண முடியாது போகின்றது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். நீங்கள் இந்த வர்த்தமானியை நிறுத்தினால் வடக்கு மக்களுக்குக் காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதிலேயே தாமதம் ஏற்படும்." – என்றார்.

# திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குழுக்களுடன் அரசியல்வாதிக்குத் தொடர்பு



போதைப்பொருள் உள்ளிட்ட திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 10 குழுக்களுடன் அரசியல்வாதிகள் தொடர்புபட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

குற்றச்செயல்களை தடுப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் நேற்று நாடாளுமன்றத்தில் விளக்கமளிக்கும் போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் 10 குழுக்களுடன் தொடர்புபட்டுள்ளதாக குற்றப்புலனாய்வு பிரிவின் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால சுட்டிக்காட்டியுள்ளார்.

# உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி

நிறுத்தி வைத்தல் வரி விதிப்பிலிருந்து விடுபடுவதற்காக சுய பிரகடனத்தை அறிமுகப்படுத்துவதற்கும், வங்கிக் கணக்குகளைத் திறக்கும் போது டி.ன். எனப்படும் வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை சமர்ப்பிப்பதையும் கட்டாயமாக்கும் வகையில் உள்நாட்டு இறைவரிச் சட்டம் திருத்தப்படவுள்ளது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் 18 இலட்சம் ரூபாவுக்கும் விஞ்சாத தொகையை வருடாந்த வருமானமாகப் பெறுவோருக்கு அறவிடப்படும் நிறுத்தி வைத்தல் வரியை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த வரிவிதிப்புக்கு உட்படுவோர் குறைந்த வருமானத்தைக் கொண்டவர்கள் என்பதால் குறித்த வரி விதிப்பிலிருந்து விடுபடுவதற்கு சுயபிரகடனத்தைச் சமர்ப்பிக்கின்ற முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது.

அதற்கமைய, அத்தகைய சுயபிரகடனத்தை அறிமுகப்படுத்தவும், வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்காக வரி செலுத்துவோர் அடையாள இலக்கத்தை சமர்ப்பிப்பதையும் கட்டாயமாக்குவதற்கான திருத்தங்களுடன், உள்நாட்டு இறைவரி சட்டத்தை திருத்தம் செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத் துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசை வலியுறுத்தியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று செவ்வாய்கிழமை (20) பிரதமர் ஹரிணி அமரசூரியவினால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில், இந்த வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எழுந்திருக்கும் முரண்பாடுகள் குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (23) மு.ப. 11.00 மணி முதல் பி.ப. 1.00 மணிவரை நாடாளுமன்றத்தில் தனது தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

“காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்தின் காணி களை நிர்ணயம் செய்வதற்காக இலக்கம் 2430 மற்றும் 28.05.2025 திகதியிட்ட இலங்கை ஜனநாயகச் சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அந்த மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் காணி நிர்ணயம் தொடர்பாக எழுந்துள்ள பிணக்குகள் குறித்துக் கலந்துரையாடுவதற்காக எதிர்வரும் வெள்ளிக்கிழமை (23) மு.ப. 11.00 – பி.ப. 1.00 மணி வரை நாடாளுமன்றத்தின் குழு அறை 01 இல் எனது தலைமையில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு உங்களது பங்கேற்பினை மிகவும் கௌரவத்துடன் எதிர்பார்க்கின்றேன்.” – என்று அந்தக் கடிதத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

## ரி - 56 ரக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரி – 56 ரக துப்பாக்கியுடன் சென்ற பெண் ஒருவர் கைதாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, குறித்த ஆடம்பர தொடர்மாடிக் குடியிருப்பிலுள்ள தனது வீட்டுக்குப் பெண் ஒருவர் ரி – 56 ரக தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கியைக் கொண்டு சென்றார்.

இவர் துப்பாக்கியை வாகனத்தில் இருந்து எடுப்பதை அவதானித்த அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற வெள்ளவத்தை பொலிஸார் குறித்த வீட்டை பரிசோதனை செய்து பெண்ணை கைது செய்தனர். இதன்போது, பை ஒன்றில் இருந்த ரி – 56 ரக துப்பாக்கியையும் கைப்பற்றினர்.

துப்பாக்கியை வைத்திருந்த பெண் மற்றும் சம்பவத்துடன் தொடர்புடைய பிற நபர்கள் தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.



# கடல் நீரை சுத்திகரிக்கும் திட்டத்தின் கீழ் கரவெட்டியில் பரீட்சார்த்த விநியோகம்

(எஸ்.ரகுதீஸ்)

கடல் நீரை சுத்திகரித்து குடிதண்ணீராக மாற்றும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், கரவெட்டிக்கான தண்ணீர் விநியோகம் நேற்று முன்தினம் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனூடாக 1300 குடும்பங்கள் பயனடைய உள்ளன என நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி திட்டத்தின் தாளையடி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து மத்துணி தாளம்குழி அமைக்கப்பட்டுள்ள நீர் தங்கியிலிருந்து முதன்முறையாக மேற்படி பகுதிக்கான தண்ணீர் விநியோகம் நேற்று முன்தினம் பரீட்சார்த்தமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தாளம்குழி முருகன் ஆலயத்தில் இடம்பெற்ற வழிபாடுகளை தொடர்ந்து தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அதிகாரிகளால் தண்ணீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.









நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# குற்றச்சாட்டும் பதிலும்!

அநுரகுமார திஸநாயக்கா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் - கடந்த எட்டு மாதங்களில் - நாட்டில் 79 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அவற்றில் 52 இறப்புக்கள் பதிவாகியுள்ளன. மேலும் பலர் காயம் அடைந்திருக்கின்றனர். இது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை யாது என்று நேற்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பி இருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

ஒரு நாட்டின் குடிமக்களின் வாழும் உரிமையை உறுதி செய்வது அரசாங்கத்தின் அடிப்படைப் பணியாகும். இங்கு நாட்டில் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வது அரசாங்கத்தின் முதன்மைப் பொறுப்பாகவும் காணப்படுகிறது. இருப்பினும், நாடு முழுவதும் தற்போது நடைபெற்று வரும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தடுக்க தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டது.

இது தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் தெரிவிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். - என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை இலக்கு வைத்து, நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன? பதிவான சம்பவங்கள் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுத்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் யாது? - என்றெல்லாம் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாதாள உலக குழுக்களைஜ் கட்டுப்படுத்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி எழுப்புகின்றார். ஆனால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவோ வேறு விதமான குற்றச்சாட்டை நேற்று நாடாளுமன்றத்தில் முன்வைக்கிறார்.

பாதாள உலக நடவடிக்கைகளுடன் நேரடி அரசியல் தொடர்புகளை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர் எனவும், விசாரணைகளுக்குப் பிறகு அத்தகைய அரசியல்வாதிகளின் பெயர்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

புலனாய்வு அறிக்கைகளின்படி, இலங்கை பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி ஆகியவற்றின் முன்னாள் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் மற்றும் தற்போதைய மாகாண அரசியல்வாதிகள் போன்றோர் சக்திவாய்ந்த பத்து பாதாள உலகக் கும்பல்களுடன் நேரடித் தொடர்புகளைப் பேணுகின்றனர் என அதிர்ச்சித் தகவலை அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும், சந்தேக நபர்களைக் கைது செய்ய பொலிஸ் குழுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

பாதாள உலகத்துடனான அரசியல் தொடர்புகள்தான் பாதாள உலக நடவடிக்கைகள் அதிகரிப்பதற்குப் பங்களித்துள்ளன எனப் புலனாய்வு அறிக்கைகள் வெளிப்படுத்துகின்றன என்றும் அமைச்சர் மேலும் கூறினார்.

எதிரணி முன் வைக்கும் குற்றச்சாட்டுக்கு, தொப்பியை அவர்கள் மீதே மாட்டி விடப் பார்க்கின்றது தந்திரசாலி அரசு...!




# கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட எம் தமிழ் உறவுகளுக்கு நீதி வேண்டும்!

## நாடாளுமன்றில் சாணக்கியன் எம்.பி. வலியுறுத்து

இறுதிப் போரின்போது கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட எமது தமிழ் உறவுகளுக்கு நீதி வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், “கடந்த வாரம் உங்களுக்குத் தெரியும். இந்த நாட்டிலே ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட வாரம். முள்ளவாய்க்கால் நினைவேந்தல் நடைபெற்ற வாரம். 16 ஆண்டுகளுக்கு முன்னர் மிக முக்கியமாக இறுதிப் போரின் போது ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட வாரம் தான் கடந்த வாரம்.

அவ்வாறு கொல்லப்பட்ட மக்களுக்கு எனது அஞ்சலியைச் செலுத்துவதுடன், கொல்லப்பட்ட மக்களுக்கு அவர்களது உறவினர்கள் எதிர்பார்க்கும் நீதியை – இன அழிப்புக்கான நீதியை இது வரைக்கும் மாறி மாறி வந்த அரசுகள் தர மறுத்திருக்கின்றார்கள். இந்த அரசின் காலப்பகுதியிலும் அது நடக்கும். அந்த நீதி கிடைக்கும் என்ற எந்த நம்பிக்கையும் இல்லை.

இந்த நாட்டில் நடைபெற்றது ஓர் இன அழிப்பு. ஆனால், அதனைச் சர்வதேச நீதிமன்றத்தில் நிரூபிப்பது கடினம் என்று சிலர் கூறிய கருத்துக்களை வைத்துக் கொண்டு நாட்டிலே இன அழிப்பு நடக்கவில்லை என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த நாம் கூறுவதாக மக்கள் குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார்கள். ஆனால், இந்த நாட்டில் நடைபெற்ற இன அழிப்புக்கு நீதி வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக சர்வதேச ரீதியாகவும் சரி உள்நாட்டுக்குள்ளும் சரி இதற்காகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் பிரதான கட்சி இலங்கைத் தமிழரசுக் கட்சிதான். அதை மக்களின் சார்பாக நின்று தொடர்ச்சியாக நாம் செய்வோம்.

நீங்கள் பார்த்திருப்பீர்கள் கடந்த வாரத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு அரசியல் பின்னணி இன்றி தாமாக முள்ளிவாய்க்காலில் ஒன்று சேர்ந்து இருந்தார்கள்.

வடக்கு, கிழக்கு தமிழர் தாயகம் முழுவதும் முள்ளிவாய்க்கால் கஞ்சி கொடுக்கப்பட்டது. இதெல்லாம் அரசியல் பின்னணியில் நடந்த விடயங்கள் அல்ல. எங்களுடைய மக்கள் கொல்லப்பட்ட மக்களுக்கு நீதி வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்கள். இதை நீங்கள் மறுக்க முடியாது.

அண்மையில் கனடாவில் இன அழிப்பு சம்பந்தமாக ஒரு சின்னம் உருவாக்கப்பட்ட போது, எமது வெளிவிவகார அமைச்சர் கனடாத் தூதுவரை அழைத்து பெரிய ஒரு விளக்கம் கொடுத்திருந்ததை நான் பார்த்திருந்தேன். ஆனால், நடக்க வேண்டியது என்ன? இந்த நாட்டிலே தமிழ் மக்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டனரா? இல்லையா? என்பது உங்களுக்குத் தெரியும்.

அப்போது ஆட்சியில் இருந்தவர்களை இந்த அரசும் பாதுகாக்க நினைக்கின்றது என்றால் அது வேறு விடயம். ஆனால், ராஜபக்ஷ குடும்பத்திற்கு எதிராகத் தொடர்ச்சியாகக் கருத்துக்களை வெளியிடும் இந்த அரசு, உண்மையில் அந்தக் குற்றங்களைச் செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும் என நினைத்தால் இந்த விடயத்துக்கு ஒத்துழைப்பை வழங்கலாம். விசாரணைகளை ஆரம்பிக்கலாம். ஆனால், உள்நாட்டு விசாரணையும் இல்லை. சர்வதேச விசாரணையும் இல்லை. தொடர்ச்சியாக தமிழ் மக்கள் நீதி இல்லாத நிலைக்குத் தள்ளப்படுவதுதான் இந்த அரசின் நோக்கம் என்பது எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

நாட்டின் ஜனாதிபதி நேற்று யுத்த வெற்றியைக் கொண்டாடுவற்குச் சென்றிருந்தார். கடந்த 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தமிழ் மக்கள் ஒன்றாகச் சேர்ந்து கொல்லப்பட்ட தமது உறவுகளுக்கு நீதி வேண்டும் என்பதில் உறுதியாக நின்றார்கள். ஆனால், நாட்டின் ஜனாதிபதி மறுநா ள் 19ஆம் திகதி போரினுடைய வெற்றியைக் கொண்டாடும் நிகழ்ச்சியில் இருக்கின்றார்.

தமிழ் மக்களின் பிரதானமான கட்சியான நாங்கள் தமிழ் மக்களுடன் இருக்கின்றோம். ஆனால் இந்த அரசு கடந்த அரசுகளைப் போன்றே வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றது.

இந்த அரசுக்குத் தமிழ் மக்கள் கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சரியான பாடம் புகட்டி இருக்கின்றார்கள். இனி வரும் காலங்களிலும் தமிழ் மக்கள் அந்த விடயத்தைச் சரியாகச் செய்வார்கள்.” – என்றார்.



# முல்லைத்தீவு மாவட்டத்தில் சாதனை படைத்து வரும் விவசாய, தொழிற்றுறை முயற்சியாளர்கள் கௌரவிப்பு

நிலைபேறான உயர்தர வாழ்க்கைத் தரம் கொண்ட வளமான மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தை உருவாக்கும் இலட்சியப் பயணத்தில் மாவட்ட மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளான விவசாயம் மற்றும் தொழிற்றுறையில் சவால்களைக் கடந்து சாதனை படைத்து வரும் முயற்சியாளர்களைப் பாராட்டி ஊக்குவிக்கும் நோக்கில் 2024 ஆண்டுக்குரிய மாவட்ட விவசாய மேன்மை விருதுகள் மற்றும் மாவட்ட தொழில்துறை மேன்மை விருதுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் என்பன வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில் தெரிவித்ததாவது:-

“எமது மாகாணத்திலுள்ள உற்பத்தியாளர்கள் இடைத்தரகர்களின்றி தங்களது பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் அதனை ஏற்றுமதி செய்வதற்கும் உரிய வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அதற்காக நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இங்கு விருதுகளைப் பெற்றவர்கள் சிலர் தங்கள் கருத்துக்களில் தமக்கான சந்தை வாய்ப்புக்களிலுள்ள சிக்கல்கள் தொடர்பில் குறிப்பிட்டிருந்தனர். அதை நிவர்த்திக்கவே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறான விருது வழங்கும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்தி முல்லைத்தீவு மாவட்டச் செயலரைப் பாராட்டுகின்றேன். எங்கேயும் தலைமைத்துவம் சிறப்பாக அமைந்தால் அந்த நிறுவனம் உயர்வுறும். நான் பல இடங்களில் இதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் தலைமைத்துவத்தால் இந்த முன்மாதிரியான செயற்பாடு நடைபெற்றிருக்கின்றது. அதேபோல புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் என்னை அதிகளவில் முன்னர் சந்தித்தனர். இப்போது அவர்கள் வருவதில்லை. அவர்களின் பிரச்சினைகள் அவர்களின் பிரதேச செயலகங்களில் பிரதேச செயலர்களால் தீர்த்து வைக்கப்படுகின்றன. புதுக்குடியிருப்பு மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர்களை நான் பாராட்டுகின்றேன்.

மக்களுக்கு சேவை செய்வதற்காகத்தான் நாம் இருக்கின்றோம். எங்களுக்காக மக்கள் இல்லை. எங்களது மக்களுக்கு நாங்கள் சேவைகளைச் செய்யாவிட்டால் வேறு யார் வந்து சேவை செய்யப்போகின்றார்கள். அதிகாரிகள் கதிரைகள் நிரந்தரம் என்று நினைத்துக்கொண்டிருக்காமல் மக்களை அன்பாக அனுசரித்து அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொடுங்கள்.

நாம் பிறந்தது சந்தோசமாக வாழ்வதற்கு. பணம் உழைப்பதால் சந்தோசம் கிடைக்காது. மற்றையவர்களுக்கு உதவி செய்வதால்தான் சந்தோசம் கிடைக்கும். எனவே, இயலுமானவரை மற்றையவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். எங்கள் அரசாங்க அதிகாரிகள் இதைப் புரிந்துகொண்டு பணியாற்றவேண்டும்.” - என்றார்.

இன்றைய தினம் 11 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டதுடன், 82

தொடர்ச்சி▼





# முல்லைத்தீவு மாவட்டத்தில் சாதனை படைத்து வரும் விவசாய, தொழிற்றுறை முயற்சியாளர்கள் கௌரவிப்பு

**தொடர்ச்சி▲**

பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர், வடக்கு மாகாண விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் தொழித்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர், வடக்குக்கான கைத்தொழில் துறைகள் மன்றத்தின் தலைவர், முல்லைத்தீவு மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.
















SRI LANKA CANADA BUSINESS COUNCIL
The Ceylon Chamber of Commerce
CANADA EDUCATION FAIR
CAREER GUIDANCE & JOB FAIR 2025
Organized by Sri Lanka - Canada Business Council
together with Canada High Commission
Shape Your Future: Explore universities and
Colleges & Job Opportunities at our Fair
30TH & 31ST
MAY 2025
9:00AM - 5:00PM
VALAMPURI HOTEL
136 STATION ROAD,
JAFFNA
JOIN OUR EVENT!
OUR SERVICES
Knowledge Partners


SRI LANKA CANADA BUSINESS COUNCIL
The Ceylon Chamber of Commerce
பிராந்திய
விருதுகள் வழங்கும்
விழா 2025
இலங்கை - கனடா வணிக மன்றம் மற்றும் கனடா
உயர்ஸ்தானிகராலயம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன
2025 மே 30 ஆம் தேதி
மாலை 06:00 மணி முதல்
ஜே ஹோட்டல்
எண். 146, புங்கன்குளம்
சாலை, யாழ்ப்பாணம்
பரிந்துரைகள் வரவேற்கப்படுகின்றன!
*முடிவுத் திகதி
05 மே 2025*
பரிந்துரை
படிவத்திற்கு QR
குறியீட்டை ஸ்கேன்
செய்யவும்
Knowledge Partners
Social Media Partner
For further information:
Tel: +94 11 5588861 / +94 11 5588840
Email: coc.trade@chamber.lk / dinithi@chamber.lk
Dinithi Dias (Assistant Secretary General)
The Ceylon Chamber of Commerce
www.srilankacanadabiz.lk
Follow us on Social Media:


SRI LANKA CANADA BUSINESS COUNCIL
The Ceylon Chamber of Commerce
SLCBC
REGIONAL AWARDS
CEREMONY 2025
Organized by Sri Lanka - Canada Business Council
together with Canada High Commission
Join us for a night of recognition,
inspiration, and celebration as we
honor the individuals and teams that
have gone above and beyond.
30TH MAY 2025
START FROM 06:00 PM
ONWARDS
J HOTEL
NO. 146, PUNGANKULAM
ROAD, JAFFNA
JOIN OUR EVENT
Knowledge Partners
Social Media Partner
For further information:
Tel: +94 11 5588861 / +94 11 5588840
Email: coc.trade@chamber.lk / dinithi@chamber.lk
Dinithi Dias (Assistant Secretary General)
The Ceylon Chamber of Commerce
www.srilankacanadabiz.lk
Follow us on Social Media:


SRI LANKA CANADA BUSINESS COUNCIL
Canada
The Ceylon Chamber of Commerce
DISCOVER YOUR PATH
CANADA EDUCATION FAIR
JAFFNA INVESTMENT & TRADE FORUM 2025
Event Hosted by: Sri Lanka Canada Business Council
In collaboration with: Canadian High Commission and
Canada Sri Lanka Business Convention
SHAPE YOUR FUTURE: EXPLORE
UNIVERSITIES AND COLLEGES &
JOB OPPORTUNITIES AT OUR FAIR
Dive into a world of opportunities where you
can discover various universities, colleges,
meet admissions officers, and chart your
academic and professional journey.
Date:
30th - 31st May
From:
09:00 am
Hotel Valampuri
148, 10 Railway, 136
Station Rd, Jaffna
JOIN OUR EVENT
Knowledge Partners
Social Media Partner
Print Media Partner
For further information:
Tel: +94 11 5588861 / +94 11 5588840
Email: coc.trade@chamber.lk / dinithi@chamber.lk
Dinithi Dias (Assistant Secretary General)
The Ceylon Chamber of Commerce
www.srilankacanadabiz.lk
Follow us on Social Media:


SRI LANKA CANADA BUSINESS COUNCIL
The Ceylon Chamber of Commerce
கனடா கல்வி கண்காட்சி
வேலை வாய்ப்புகள் மற்றும்
தொழில் வழிகாட்டுதல் 2025
இலங்கை - கனடா வணிக மன்றம் மற்றும் கனடா
உயர்ஸ்தானிகராலயம் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன
உங்கள் எதிர்காலத்தை வடிவமைக்க, எங்கள்
பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளுடன்
கலந்துரையாடுங்கள், எங்கள் கண்காட்சியில்
வேலை வாய்ப்பு நேர்காணல்களும் நடைபெறும்.
மே 30 & 31, 2025
9:00 AM - 5:00 PM
வலம்புரி ஹோட்டல்,
136 ஸ்டேஷன் வீதி,
யாழ்ப்பாணம்
JOIN OUR EVENT!
OUR SERVICES
Knowledge Partners


SRI LANKA CANADA BUSINESS COUNCIL
The Ceylon Chamber of Commerce
TECHNICAL
SESSIONS
Organized by Sri Lanka - Canada Business
Council together with Canada High Commission
ON SATURDAY,
31ST MAY 2025
HOTEL VALAMPURI
148, 10 RAILWAY, 136
STATION RD, JAFFNA
START AT
9.30AM - 4.30PM
Deep Dives into Diverse
Sectors.
JOIN OUR EVENT
HIGHLIGHTS:
10.20AM
Tourism & Hospitality Sector
11.30AM
Entrepreneurial Sector
2.00PM
Agriculture Sector
2.00PM
SME Development & Supply
Chain Management Sector
Knowledge Partners
For further information:
Tel: +94 11 5588861 / +94 11 5588840
Email: coc.trade@chamber.lk / dinithi@chamber.lk
Dinithi Dias (Assistant Secretary General)
The Ceylon Chamber of Commerce
www.srilankacanadabiz.lk
Follow us on Social Media:



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

27

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



கட்டுரைத் தொடரின் நேற்றைய பத்தியில் "இப்பொழுது தேசிய மக்கள் சக்தியிடம் இருந்து தமிழ் மக்களது அரசியல் அபிலாசைகளை ஒட்டி நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்ட சமிக்ஞைகள் வெளிவருகின்றனவா?" எனக் கேட்டு முடித்து இருந்தேன்.

அதற்குக் காணக்கூடிய பிரதிபலிப்பாக, போர் முடிந்த 16 வருடங்களை ஒட்டி மே 18 மற்றும் 19 ஆம் நாள் நினைவுகள் இரு பகுதியினராலும் (இரு என்பதை அழுத்திச் சொல்லுகிறேன்) மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பதினாறு வருடங்களின் பின்னும் தமிழ் மக்களது நினைவு கூரும் நிகழ்ச்சிகள் தங்கள் அவலங்களின் சோகங்களை வெளிப்படுத்தும் நினைவுகளாகவே இருந்தன. உயிர் நீத்தோர், காணாமல் போனோர் என்பவர்களுக்கான அஞ்சலியாகவும் அவை அமைய், சிங்களப் பகுதிகளிலோ அவை அரசாங்கத்தின் அதிகார முனைப்பில், பயங்கரவாதத்தைத் தோற்கடித்த இராணுவத்திற்கு மரியாதை செய்து, அந்தப்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

போரில் இறந்த படை வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தி, வெற்றியைக் கொண்டாடும் – நிலைநிறுத்தும் – அரச விழாவாகவும் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்த விழாவில் பங்கு பற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா "இந்த நாட்டில் உங்களது உறவினர்களுக்கும் வளரும் சமுதாயத்திற்கும் இந்த சந்ததி விட்டுப் போகக்கூடியது 'சமாதானம்' என்ற மிக உயர்ந்த நீதி. அந்த சமாதானத்தை பெற்றுத் தந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவது என்பது, மீண்டும் ஒரு மோதல் ஏற்பட இடமளிக்காமல், வெறுப்பு நிறைந்த சமூகத்திற்குப் பதிலாக அன்புடன் கூடிய ஒற்றுமை நிறைந்த சமூகத்தை உருவாக்கத் தயார் என்ற உறுதி மொழியை எடுப்பதாகும்"என்று தெரிவித்தார்.

இந்த யுத்தத்தை நடத்தி, தமிழ் மக்களின் பெயரில் அதனை முன்னெடுத்த விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டி, தூண்டியவர்கள் ஜே.வி.பியினர். தாங்கள் அதிகாரத்திற்கு வருவதற்காக அவர்கள் எடுத்த சந்தர்ப்பவாத முனைப்புகளுக்காக, போர் ஒன்றைத் தவிர்த்து அதிகாரப்பரவலை அடிப்படையாகக் கொண்ட தீர்வு ஒன்றைப் பெறக்கூடிய முயற்சிகள் எல்லாவற்றையும் முறியடித்ததில் ஜே.வி.பி. அங்கத்தினராக இந்த ஜனாதிபதியே முன்நிற்கின்றார்.

இந்தப் போர் நடந்ததற்கான காரணங்களை

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

எத்தனையோ அறிக்கைகள் புடமிட்டுக் காட்டினாலும், அவற்றை ஆராய்ந்து, ஒரு நிலையான சமாதானத்தை நிறுத்த விரும்பாமல், தொடர்ந்தும் அதே போக்கில்தான் தேசிய மக்கள் சக்தியும் செல்வதாக மனோ கணேசன் குறிப்பிடும்போது, அவற்றைத்தான் போர் குற்றங்கள், மனிதாபிமானத்துக்கு எதிரான செயற்பாடுகள், பொறுப்பு கூறலுக்கு இந்த அரசாங்கத்திடமிருந்தாவது தெளிவான பார்வை வருமா என சர்வதேச மன்னிப்பு சபை கேட்கிறது.

ஆனால், அவற்றுக்கு சமிக்ஞையாக 'தங்களுக்கு வெற்றியைத் தேடித் தந்த படை வீரர்களை தங்களால் காட்டிக் கொடுக்க முடியாது. போர் குற்றங்கள் எதுவும் நடைபெறவில்லை. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கவுன்ஸிலின் தீர்மானங்களுடன் ஒத்துப் போக முடியாது' என அறிவிக்கப்பட்டாயிற்று. அவை அதிகாரங்களைத் தக்க வைத்துக் கொள்ள விரும்பும் சமிக்ஞைகளே ஒழிய, நல்லெண்ணத்துக்கானவையல்ல.

இந்த நினைவு கூரல் விழாவிற்கு செல்லும் முன் ஜனாதிபதி, மிஹிந்து செத் மெதுர, ராகம ரணவிரு செவன போன்ற, பலத்த காயங்களுடன் பராமரிக்கப்படும் இராணுவத்தினரின் நல விடுதிகளுக்குச் சென்று, அங்கு பராமரிப்புப் பெறும் படை வீரர்களைச் சந்தித்து, அவர்களின் தியாகங்களுக்கு நன்றி கூறி, நலம் விசாரித்து, நல்லெண்ணம் வளர்த்தார்.

ஆனாலும் அவரது நல்லெண்ணம் வளர்க்க வேண்டிய, சமாதானத்தின் சமிக்ஞையாக, அவரோ அவரது பிரதிநிதிகள் எவரோ, விரும்பியோ, விரும்பாமலோ போர் நடந்த பூமியில் அடைக்கலத்துக்கு வந்து பின் அவர்களை மீட்பதற்கே என்று நடத்தப்பட்ட போரில், அவர்களது இராணுவத்தால் தாக்கப்பட்டு பாரிய காயங்களுக்கு உள்ளான – அதேபோன்ற விடுதிகளில் பராமரிப்பு பெறும் மக்களை, தங்களையும் மீறி அனாதை மடங்களில் குழந்தைகளாக சேர்க்கப்பட்டு இன்று குறைந்தது 16 வயதை அடையும் இளம் சமுதாயத்தைக் கண்டு, அவர்களைத் தேற்றி, சமாதானம் தேட முற்படவில்லை.

ஏனெனில் தாங்கள் நடத்திய போரின் விளைவுகள் இது என்பதனால், அதனைக் காணவோ, பாதிப்படைந்தவர்களுக்கு ஆறுதல் தர வேண்டும் என்ற உணர்வோ மனப்பாங்கோ இருந்ததில்லை. இருப்பதில்லை.

கலிங்கத்தை வென்ற அசோக மன்னனிடம் யுத்தக் களத்தில் அவனைக் கண்ட பௌத்த துறவி அவனிடம் கேட்டது "வெற்றி உனதுதான். ஆனால் அந்த வெற்றியின் விளைவுகளை இப்போது பார்த்தாயா? இந்த மண் இப்பொழுது உனதுதான். ஆனால் அதற்காக நீ கொடுத்த விலையின் மதிப்பைப் பார். இவ்வளவு விளைவுகளில் அந்த மண்ணின் பெறுமதி என்ன? உன்னுடைய அகங்காரத்தில் சந்தோஷம் நிரம்பி வழியும். ஆனால் அந்த அற்ப சந்தோஷத்திற்காக நீ செய்த பிரதி உபகாரங்களையும் பார்." – என்றார்.

அசோகமன்னனைபோரின்விளைவுகளும்,பௌத்த துறவிகளின் அத்தகைய போதனைகள் போன்றவையும் போரையே துறக்க வைத்து, அஹிம்சை வழியில் நடக்கத் தூண்டின.

இந்த நாட்டின் துர்ப்பாக்கியம், போதனைகள்

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

யாவும் செவிடர்கள் காதுகளில் ஊதப்படும் சங்குகளாக வே இருக்கின்றன. பௌத்த துறவிகள் பலர் இருந்தும், ஜனாதிபதி கூறும் சமாதானம் என்பது அதை நிலை நிறுத்துவதற்காக, அதற்காக தியாகங்கள் செய்த படையினருக்கு நன்றி செலுத்தி நினைவு கூர வேண்டும் என்ற வார்த்தைகளும், அவர்கள் ஈழக் கோரிக்கையாளர்களை கருவறுத்து, 'ஒரு நாடு, ஓர் அதிகாரம்' என்ற தங்களது கொள்கையை நிலை நிறுத்தியவர்கள், அந்தக் கொள்கையை நிலைநிறுத்த மீண்டும் மீண்டும் உறுதி கொள்ள வேண்டும் என்ற கோட்பாடுமே.



சுடுகாட்டிலும் ஓர் அமைதி இருக்கும். அது நிரந்தரமான அமைதிதானா என்பதை உள்ளுணர்வுகள் தெரிவிக்கும். ஏனெனில் முள்ளிவாய்க்காலில் ஏற்பட்ட மரண அமைதிக்கு கருவியாக இருந்தவர் மஹிந்தர். மே 18 விழாக்களை அரசில் இருந்தபோது வெற்றிக் களிப்பான கொண்டாட்டங்களாக நினைவு கூர்ந்தவர். அவர் கங்காராம பௌத்த விகாரையில் நேற்று முன்தினம் தனியாக நினைவு கூர்ந்த நிகழ்ச்சியில் 'நேசத்தை நாடுவதுதான்' இப்போது செய்யப்படக்கூடிய பணி என்றும், போர்க்களத்தில் நாட்டுக்காக தங்களது உயிர்களைத் தியாகம் செய்த வீரர்களுக்கும், அனைத்து வீரர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்காகவும் அஞ்சலி செலுத்தினார். ஊனமுற்ற தியாகிகளுக்கு மரியாதை செய்தார்.

தர்மங்கள், காலங்கள் இருந்துதான் நீதியை கேட்கும் என்று சகல மதங்களும் கூறுகின்றன.

நல்லெண்ணம் நம்பிக்கை எனும் போது சில இதிகாச கதைகள் நினைவுக்கு வருகின்றன.

கிரேக்க இலக்கியத்தில் 'ஒடிசே' எனும் காப்பியத்தில் ரோஜான் என்ற குதிரை பற்றிய குறிப்பு ஒன்று உண்டு. கிரேக்கர், ரோஜான் நாட்டு மக்களுடன் நீண்ட போரை நடத்தியும், ரோஜான் நகரின் கோட்டைக்குள் உள்புகுந்து, அதனைக் கைப்பற்ற முடியாதிருந்தார்கள். ஆகவே, கிரேக்கர் தந்திரசாலிகளாக, மரத்தினாலான மிகப்பெரிய குதிரை ஒன்றைச் செய்து, அதில் சில கிரேக்கப் படை வீரர்கள் சில நாள்கள் மறைந்து, தங்கி இருக்கக்கூடிய வசதிகள் செய்து, தாங்கள் இனி நிரந்தர சமாதானத்தை விரும்புகிறார்கள் எனவும், அந்த நல்லிணக்கத்திற்காக இந்தக் குதிரையை நல்லெண்ணத்துடன் தருகிறார்கள் எனவும், ரோஜான் மக்களுக்குக் கூறினார்கள். அதனை நம்பி, அந்த மக்களும் அந்த மரக்குதிரையை நல்லெண்ணத்தின் சின்னமாக விமரிசையாக தங்கள் கோட்டைக்குள் எடுத்துச் சென்று, நிறுத்தினர். சில நாளில் கிரேக்கப்படை ஓரளவு கோட்டை வாசலை அடைந்து, முற்றுகைக்குத் தயாரான போது, குதிரைக்குள் மறைந்திருந்த படையினர் அதிலிருந்து இறங்கி, கோட்டை வாசல் கதவுகளைத் திறந்து விட, கிரேக்கர் மிகவும் இலகுவாக உள்புகுந்து ரோஜான் நகரைக் கைப்பற்ற முடிந்தது.

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?

தொடர்ச்சி▲

இன்னும் ஓர் இதிகாசத்தில் இலக்குவனனை ஏமாற்றிக் கொண்டு, சீதையை இராவணன் கவர்ந்து செல்ல வழி வகுத்த மாயமானதும் பாகம் உண்டு.

நல்லிணக்கம், நம்பிக்கை, சமாதானம், சமதர்மம் என்ற கோட்பாடுகள் அற்ற வார்த்தைகளில் இளைஞர்களை – வரலாறுகளின் தாற்பரியங்களை ஆழமாக அறிந்து கொள்ளாதவர்களை – 'மாற்றம் ஒன்று வேண்டும்' என்ற உணர்ச்சி கொந்தளிப்பில், அரசியல் பரப்பில் இறக்கிவிட்டு, தமிழ் மக்களின் அபிலாசைகளை காவு கொள்ளவா, அன்றில் நீர்த்துப் போகச் செய்யவா இப்படியான குதிரைகள் இறக்கப்பட்டுள்ளன எனவும், மாயமான்கள் உலாவிடப்பட்டுள்ளன எனவும் கேள்விகள் பலரின் மத்தியில் உண்டு.

தமிழ் இளைஞர்களின் மத்தியில் போர் முடிந்த காலத்தில் இருந்தாவது தங்களின் அரசியல் தலைவர்கள் வாழ்வாதாரத்திற்கான வழிமுறைகள் எதிலுமே அக்கறை காட்டவில்லை, வேலை இல்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடுகின்றது என்ற ஏமாற்றம், கோபம். ஆகவே, மாற்றம் தேவை என்ற உணர்ச்சிப் பீறல். இதே வேலையில்லாத் திண்டாட்டம்தான் – முக்கியமாகப் படித்த வாலிபர்களிடையே – விரக்தியைத் தூண்டி, அரசியல் போக்கை நிர்ணயித்தது. அதே வேலையில்லாத் திண்டாட்டம்தான் சிங்கள இளைஞர்களை ஜே.வி.பியின் அரசியல் சித்தாந்தத்தில் இணைய வைத்தது.

உணர்ச்சிகளின் விளைவுகளில் வந்த அரசியல் பெறுபேறுகளையும் அவற்றின் அனுபவங்களையும் கொண்டுதான் மாற்றத்திற்கான மாற்றுச் சிந்தனையை வகுக்க வேண்டும்.

கட்டுரை வாசகர்களில் ஒருவர் குறுஞ்செய்தியாக, 1978 இல் ஜே.வி.பி. தலைவர் விஜயவீர யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களுக்கு குறைகள் இருக்கின்றன என ஏற்றுக்கொண்டு, அவை கணக்கெடுக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படும் எனக் கூறினார் எனத் தெரிவித்தார்.

ஆம். அது உண்மைதான். முன்னர் விரிவாக கூறியபடி, 1977 ஆம் ஆண்டின் பொதுக்குழு தீர்மானத்தின் மீதான விவாதங்களில் மார்க்ஸீயவாதியாக நடந்த சுய ஆராய்வில், அவர் அவற்றை ஏற்றுக் கொண்டு, தமிழ்ப் பகுதிகளில் அந்தப் பரப்புரையை செய்தார். அதேபோல 1983 இல் இருந்து தமிழ் மக்களது பிரச்சினை பற்றி ஜே.வி.பி. வெளியிட்ட பிரகடனங்களின் அடிப்படையில் 86 இல் அவர் வெளியிட்ட நூலில் அதனை ஆமோதித்து, தீர்வு ஒரு நாட்டுக்குள் சம உரிமையில், ஓர் அதிகாரத்தில் அமைய வேண்டும் என்ற கருத்தியலை வைத்தார்.

ஆக, சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகள் தேர்தல் காலங்களில் எப்பொழுதுமே தமிழ் மக்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு, காணி, பொருளாதாம் என்பவற்றில் குறைபாடுகள் உண்டு, அவை நிவர்த்தி செய்யப்பட வேண்டும், அதற்கான வழிமுறைகளைத் தாங்கள் செய்வோம் என உறுதிமொழி தருவார்கள். ஜே.ஆர். கூட, அதனைத் தனது 1977 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறித்தார். சந்திரிகா அம்மையார் தமது பிரதம மந்திரி காலத்திலும், பின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரங்களிலும் அதனை முன் வைத்தார். அறகலய போராட்டத்தில் நடந்த ரனிலது ஜனாதிபதி தெரிவின் போது ஆதரவுக்காக சஜித் குழுவினர் தமிழ் கூட்டமைப்பினருடன் நடத்திய பிரத்தியேகச் சந்திப்புக்களில் இவற்றை ஏற்றுக்கொண்டு உறுதிமொழி தந்தனர்.

ஆனால் இந்த நல்லிணக்க நம்பிக்கைக்கான உறுதிமொழிகள் யாவும், அதிகாரத்தில் அமர்வதற்கு ஒழிய, அவற்றை அமுல்படுத்துவதற்குரிய திராணியில் வருவதில்லை. தாங்கள் அதிகாரத்தை அடைவதற்காக வன்முறைகளை சந்தர்ப்பவாதமாக நடத்தியவர்கள் – அதிகாரத்தில் பங்குதாரிகளாக இருப்பதற்கு எந்த ஒரு வழியையும் பாவித்தவர்கள் – தங்களது 'ஒரு நாடு, ஓர் அதிகாரம்' என்ற கொள்கைக்காக இடையில் நடந்த சமாதான ஏற்பாடுகள் யாவற்றையும் குழப்பி இராணுவ தீர்வுக்காக வேண்டி காரியமாற்றியவர்கள் – அந்தக் கொள்கைகளை விட்டுக் கொடுத்து, மாற்றுக் கொள்கையை அனுசரிப்பார்கள் என்பதைக் கிரகித்துக் கொள்வது கஷ்டம். அதை இளைஞர்கள் புரிந்து கொண்டு உள்ளார்களா என்பதை அறிவது அதைவிட கஷ்டமானது. ஏனெனில் அவற்றைத் தேசிய மக்கள் கட்சியின் கூட்டங்களில் விவாதிக்கலாம் என நம்புகிறார்கள். ஆனால் ஜே.வி.பி. பொதுக்குழுவிலோ, அதன் அரசியல் தலைப்புகளுடனோ பேசி மாற்றக்கூடிய அங்கத்துவப் பலமோ அன்றில் திராணியோ, அரசியல் அனுபவமோ அவர்களுக்குக் கிடையாது. எடுக்கப்படும் முடிவுகளின் பார்வையாளர்களாக – அன்றில் பூஜைகளின் முடிவில் கொண்டு செல்லப்படும் விபூதி, சந்தனம், சுண்டல் தட்டங்களை காவுபவர்களாகவோ – அவர்கள் இருக்க முடியும். ஏனெனில் எண்ணிக்கை தொகையும் அதிகாரமும் அவர்களுடையதுதான்.

(வளரும்)

# மீனவர்களுக்கு காப்புறுதித் திட்டம்



(உடப்பு க.மகாதேவன்)

கடற்றொழிலை அபிவிருத்தி செய்தல் மற்றும் மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, மீனவ சமூகத்திற்கான திடீர் விபத்து காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள மீனவ சமூகத்தினர், தங்கள் பணியின் அபாயகரமான தன்மை காரணமாக, உயிருக்கு ஆபத்தான விபத்துக்களுக்கு ஆளாகும் அபாயம் அதிகம் காணப்படுகிறது.

புதிய அரசாங்கம் இந்த விடயத்தில் விசேட கவனம் செலுத்தி, இந்த விபத்துகளுக்கு இழப்பீடு வழங்குவதன் மூலம் மீனவர்கள் நீண்டகாலமாக தொழிலில் ஈடுபடுவதை உறுதி செய்வதற்காக இந்த காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக விவசாய மற்றும் விவசாய காப்பீட்டு சபை தெரிவித்துள்ளது.

விவசாய காப்பீட்டு சபை ஏற்கனவே பல்வேறு விவசாய மற்றும் விவசாயம் தொடர்பான துறைகளுக்கான காப்பீட்டுத் திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், மீனவ சமூகத்திற்கு தனித்துவமான காப்பீட்டுத் திட்டமாக விவசாய காப்பீட்டு சபையால் இந்த காப்புறுதி திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, “1990ஆம் ஆண்டு 23 ஆம் இலக்க மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்புப் பலன்கள் சட்டம்” மூலம் மீனவ சமூகத்திற்கான ஓய்வூதியத் திட்டங்களைச் செயல்படுத்த சபையிக்கு வழங்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ அதிகாரங்களின் கீழ், ஆண்டுதோறும் செயற்படுத்த கூடிய வகையில் இந்த திடீர் விபத்து காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் ஊடாக கடற்றொழிலில் ஈடுபடும்போது சீரற்ற வானிலையால் அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பங்களில் மீனவர்களுக்கு ஏற்படும் விபத்துகள், இயலாமை மற்றும் உயிர் இழப்பு போன்றவற்றின் போது, அவர்களுக்கு இந்த காப்பீட்டுத் திட்டம், நன்மைகளை வழங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

# நெடுந்தீவில் இன்று நூல் அறிமுகம்




கவிஞர் ஈழபாரதியின் “ஐந்திணை நிலமும் ஆறாம் திணை அகதியும்” என்ற கவிதை நூலின் அறிமுக விழா இன்று புதன்கிழமை (மே 21) காலை 10:00 மணிக்கு, நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்நிகழ்வில், கலாசார உத்தியோகத்தர் அ.சிவஞானசீலன் தலைமையில், நூலை பிரதேச செயலாளர் திருமதி நிவேதிகா கேதீசன் அவர்கள் வெளியிட, அதனை றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரி முதல்வர் அருட் சகோதரி மெரினா சகாயம் பெற்றுக்கொள்கிறார்கள்.

நூல் வெளியீட்டு உரையை நெடுந்தீவு மகாவித்தியாலய அதிபர் ஐ. தாயாபரன் வழங்க, நெடுந்தீவின் பங்குத் தந்தை அருட்பணி ப.பத்திநாதன் அடிகளாரின் வாழ்த்துரை இடம்பெற உள்ளது.

கலை,இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொண்டு இந்நிகழ்வைச் சிறப்பிக்க அழைக்கப்படுகின்றனர்.




# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடம் மன்னிப்புக் கேட்டார் தமிழரசில் வெற்றி பெற்ற வேட்பாளர்

(பா.சதீசன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடம் மன்னிப்புக் கோரினார் கரைதுறைபற்று பிரதேசசபைக்கு தமிழரசுக் கட்சியில் தெரிவாகிய பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன்.

நேற்றையதினம் மாலை 3 மணியளவில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

இன்றைய சூழலிலே தமிழ்த் தேசியப் பரப்பிலே இணைந்து பயணிக்கூடிய கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து, தமிழ்த் தேசியத்தை வலுப்படுத்த வேண்டிய சூழல் காணப்படுகின்றது. இந்நிலையில் கடந்த வாரம் ஓர் ஊடக சந்திப்பை தேர்தலுக்கு பின்னர் நிகழ்த்தியிருந்தேன். அதில் தமிழ்த் தேசியத்தின்பால் செயற்படக்கூடிய – ஒரு காலகட்டத்திலே இந்த தேசத்திலே ஜனநாயக ரீதியாக எங்கள் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட சமயம் அவை அரச பயங்கரவாதத்தினரால் ஒடுக்கப்பட்டபோது அவற்றிற்கெதிராக பல இயக்கங்கள் போராடியிருந்தன.

அவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமாக இருக்கலாம், ரெலோ இயக்கமாக இருக்கலாம் அல்லது புளொட் அல்லது ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆக இருக்கலாம், எந்த இயக்கமாக இருந்தாலும் அவர்களுடைய தியாகங்கள் போற்றப்பட வேண்டியவை. தங்களுடைய இளமைக்காலங்களை எம் இனத்திற்காக கொடுக்க துணிந்தவர்களின் தியாகங்கள் எந்த நேரத்திலுமே கேள்விக்கு உட்படுத்த முடியாதவை. அதியுயர்ந்தவை.

எனக்கு வன்முறை மீது உடன்பாடு கிடையாது. ஆனால் வன்முறை தழுவி எமது விடுதலை பயணத்தை ஒடுக்க முற்பட்டபோது வன்முறையினை கையில் எடுக்கவேண்டிய சூழலிலே பல்வேறு இயக்கங்களில் பல்வேறு இளைஞர்கள் தம் உயிர்களை கொடுத்திருந்தார்கள். அந்த தியாகங்களை நான் மிகவும் கனதியாக மதிக்கின்றேன்.

என்னுடைய அண்ணன் கூட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து இம் மண்ணிற்காக உயிர்த்தியாகம் செய்திருக்கின்றார். எனவே உயிர் தியாகத்தின் பெறுமதியை நான் நன்கு அறிந்தவன் எனும் வகையில் தமிழ்ரகளின் விடுதலைக்காக தம் உயிர்களை கொடுத்த இயக்கங்கள் எதுவாக இருந்தாலும் உயிர்த்தியாகங்கள் மதிக்கப்பட வேண்டியவை எனும் அடிப்படையிலே நான் அந்த இயக்கங்களை ஒட்டுக்குழு என்கின்ற பொருள்பட பேசியிருந்தால் – அந்த விடயம் ஒரு தவறான புரிதலுக்கு உட்படுத்தப்பட்டு இருந்தால் – தமிழ் தேசிய நலனுக்காக இந்த பொதுவெளியிலே பகிரங்க மன்னிப்பு கோருகிறேன்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி இறுக்கமான – மிக நேர்த்தியான – ஒரு தலைமைத்துவத்தினால் வழிநடத்தப்படுகின்றது.

தமிழ் அரசுக்கட்சி ஓர் இறுக்கமான தீர்மானத்தைக் கொண்டிருக்கின்றது. தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கக்கூடிய மாற்று இயக்கங்கள் அல்லது ஏனைய கட்சிகளை விமர்சிப்பது என்பது இலங்கை தமிழ் அரசுகட்சியை பொறுத்தவரை ஒரு குற்றமாகவே பார்க்கப்படுகின்றது. எனவே அந்த கட்சியின் தீர்மானத்தை நான் மீறியிருக்கின்றேன். எனவே இலங்கை தமிழ் அரசுக்கட்சியினுடைய தலைமையிடமும் என்னுடைய வார்த்தை பிரயோகத்தை உளரீதியாக பாதிப்படைந்திருக்கக்கூடிய சகோதர கட்சிகள்கட்சி அல்லது சகோதர இயக்கத்திடம் பகிரங்க மன்னிப்பு கோருகின்றேன். இந்த இனத்தினுடைய விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த அனைத்து கட்சிகளினுடைய போராளிகளையும், இயக்கத்தினுடைய போராளிகளையும் நான் உளமார நேசிக்கிறேன். நாங்கள் அனைவரும் ஒற்றுமையாக தமிழ் தேசியத்தின் இருப்பிற்காக தொடர்ச்சியாக இணைந்து பயணிப்போம். – என மேலும் தெரிவித்தார்.

இதன் போது இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் கரைதுறைப்பற்று பிரதேச கிளை–யின் செயலாளருமான பீற்றர் இளஞ்செழியனும் உடனிருந்தார்.

# ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த 5 இளைஞர்கள் மஸ்கெலியாவில் கைது

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து ஐந்து இளைஞர்கள் தலா 20 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு உள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக கிடைக்க பெற்ற இரகசிய தகவலை தொடர்ந்து 18 வயதுக்கும் 20 வயதுக்கு உட்பட்ட ஐந்து சந்தேக நபர்கள் இவ்வாறு மஸ்கெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸார் விசாரணையின் பின்னர் அவர்களை ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த உள்ளனர் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் பெருந்தோட்ட பகுதியில் உள்ள இளைஞர்களை இலக்கு வைத்து போதைப் பொருள் விநியோகம் நடக்கிறது என்று கூறிய அவர் அதில் இருந்து தங்களது பிள்ளைகளைப் பெற்றோர் காப்பாற்றி கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.




# மட்டு. வீதி அதிகார சபையின் ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரி நேற்று ஆர்ப்பாட்டம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் வீதி அதிகாரச சபையில் தற்காலிகமாகக் கடமையாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்கக் கோரி ஐக்கிய பொது சேவையாளர் சங்கம் நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலைய வீதிச் சுற்றுவடத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும் ஆர்ப்பாட்ட ஊர்வத்தில் ஈடுபட்டனர்.

வீதி அதிகார சபையில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட 141 ஊழியர்கள் கடந்த 9 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வந்திருந்த போதும், அவர்கச் இதுவரை நிரந்தரமாக்கப்படவில்லை. எனவே அவர்களை நிரந்தராக்குமாறு கோரி ஐக்கிய பொது சேவையாளர் சங்கத்தின் மட்டக்களப்பு தலைவர் சுரேஸ் தலைமையில் ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதனைய:த்து நகரிலுள்ள பொலிஸ் நிலைய வீதிச் சுற்றுவட்டத்துக்கு அருகில் ஒன்று கூடிய வீதி அதிகார சபையில் தற்காலிகமாக கடமையாற்றிவரும் ஊழியர்கள் பகல் 12.00 மணிக்கு ஒன்று திரண்டு "அனைத்து தற்காலிக ஊழியர்களையும் நிரந்தரமாக்கு!", "14 நாள் மருத்துவ லீவு வழங்கு!", "ஏனைய ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகளை வழங்கு!", "ஜனாதிபதியே! எங்களை நிரந்தரமாக்குங்கள்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்கள் ஏந்தியவாறு, கோஷங்கள் எழுப்பிபடி அங்கிருந்து ஆர்பாட்ட ஊர்வலமாக காந்தி பூங்காவை சென்றடைந்து அங்கும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் 1.00 மணிவரை இடம்பெற்றது. பின்னர் ஆர்பாடகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர்..














# நல்லூரான் சுற்றாடலில் திறக்கப்பட்ட அசைவ உணவகத்துக்கு நேற்று எதிர்ப்பு

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூட வலியுறுத்தி சைவ அமைப்புக்களின் ஏற்பாட்டில் நேற்றையதினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று மாலை ஆரம்பித்த பேரணி யாழ் மாநகர சபை முன்பாக நிறைவடைந்தது.

இதன்போது யாழ் மாநகர சபைக்கு முன்பாக திறக்கப்பட்ட அசைவ கடைக்கு எதிராகவும் போராட்டக்காரர்களால் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்தப்போராட்டத்தில்சைவசமயதலைவர்கள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், சைவ சமய ஆர்வலர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.














# சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு தினம் யாழில் சிலைக்கு மாலையிட்டு நேற்று அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த 2 ஆம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவு தினம் நேற்று செவ்வாய்க் கிழமை காலை யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டது.

யாழ்ப்பாணம், நல்லூர் பருத்தித் துறை வீதி – செம்மணிச் சந்தியிலுள்ள சங்கிலிய மன்னன் சிலைக்கு மலர் மாலைஅணிவிக்கப்பட்டுஅஞ்சலிசெலுத் தப்பட்டது.

இதனொரு அங்கமாக 2 ஆம் சங்கி லிய மன்னனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

சிவசேனையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாண பல்கலைக்கழக ஓய்வு நிலை பேரா சிரியர் க.தேவராஜா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோவில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம்,

யாழ் மாநகர ஆணையாளர் ச.கிருஷ் ணேந்திரன், மதத்தலைவர்கள், வர்த்த கர்கள், பொதுமக்கள் கலந்துகொண் டனர்.












# முள்ளிவாய்கால் நினைவு நாளை முன்னிட்டு தீர்வு வேண்டி பிரிட்டிஷ் பிரதமருக்கு மகஜர்

பிரித்தானியா தமிழர் ஒருங்கிணைப்புக் குழு மற்றும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் ஆகியன ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினை வலியுறுத்தி பிரித்தானிய பிரதமருக்கு கான மனு ஒன்றைக் கையளித்துள்ளன.

முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களை நினைவு கூரும் 16ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நடத்தப்பட்ட சமயம் குறித்த மனு வழங்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் டவுனிங் வீதியில் உள்ள பிரித்தானியா நாடாளுமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் 16ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் நினைவு கூரப்பட்டது.

பிரித்தானியா நாடாளுமன்றத்திற்கு முன்பாக ஒன்று கூடிய ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர், யுவதிகள் நாடாளுமன்றத்திற்கு முன்பாக கனவீர்ப்பினை

தொடர்ச்சி▼









# முள்ளிவாய்க்கால் நினைவு நாளை முன்னிட்டு தீர்வு வேண்டி பிரிட்டிஷ் பிரதமருக்கு மகஜர்

தொடர்ச்சி▲

வெளிப்படுத்தி பேரணியாக பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிற்கு முன்பாகச் சென்றடைந்தனர்.

பின்னர், அங்கு நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் அவர்கள் கலந்து கொண்டனர்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த நினைவுத் தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலர்தூவி தீப வணக்கம் செலுத்தப்பட்டது.




# வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் முறையற்ற அதிபர் நியமனம் என்று அதிருப்தி

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு அறிக்கை

**(வவுனியா நிருபர்)**

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் முறையற்ற வகையில் அதிபர் நியமனம் இடம்பெற்றுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு திங்கள் கிழமையில் இருந்து புதியவர் ஒருவர் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளர். அவரது நியமனத்தில் பல்வேறு பொருத்தமற்ற செயற்பாடுகள் அரங்கேறியுள்ளன.

குறிப்பாக நேர்முகத் தேர்வு இன்றி வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபார்சின் அடிப்படையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதிபர் தெரிவிற்காக ஏற்கனவே இரண்டு நேர்முக தேர்வுகள் நடைபெற்ற நிலையில் அது தொடர்பான எந்தவிதமான வெளிப்படுதல்களும் இன்றி இந்த நியமனம் புதிதாக வழங்கப்பட்டுள்ளமையை முறைகேடான ஒரு விடயமாகவே எம்மால் பார்க்க முடிகின்றது.

"1சீ" பாடசாலைகள் மற்றும் வகை மூன்று பாடசாலைகளுக்கு அதிபர் நியமனத்தின் போது நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கபட்டு வரும் நிலையில் "1ஏபி" பாடசாலை-க்கு நேர்முக தேர்வை நடாத்தாமல் நியமனம் வழங்கப்பட்டமை முறையற்ற செயற்பாடாகும்.

முதற் தடவையாக நடைபெற்ற நேர்முக தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இரண்டாம் முறை நேர்முக தேர்விற்கான விண்ணப்பம் கோரி அதனையும் இழுத்தடித்தமையானது இந்த அதிபரை நியமனம் செய்வதற்கான உள்நோக்கத்தை கொண்டிருந்ததா என எமக்குச் சந்தேகம் எழுகின்றது.

அத்துடன் வலயக் கல்விப் பணிப்பாளரின் தனிப்பட்ட பரிந்துரையை மட்டும் அடிப்படையாகக் கொண்டு கல்விச் செயலாளரினால் நியமனம் வழங்கப்பட்டமையானது வலயக்கல்விப் பணிப்பாளரின் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு இடமளிக்கும் நிலைமையை ஏற்படுத்தி உள்ளது.

தற்போதைய பிரதமர் அண்மையில் வவுனியாவில் கலந்து கொண்ட நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போது பாடசாலைகளுக்கான அதிபர் நியமனங்கள் நேர்முகத்தேர்வின் அடிப்படையிலேயே வழங்கப்படும் என குறிப்பிட்டிருந்தமையையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். - என்று அந்த அறிக்கையில் உள்ளது.

# பஹல்காம் தாக்குதலுக்கு முன்பு மோடிக்கு உளவு தகவல் கிடைத்தது

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு

பிரதமர் மோடி தலைமையிலான அரசு உரிய பாதுகாப்பை வழங்காததன் காரணமாகவே பஹல்காமில் 26 சுற்றுலாப் பயணிகள் கொல்லப்பட்டனர் என காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.



கர்நாடகாவில் காங்கிரஸ் அரசு பொறுப்பேற்றதன் 2 ஆம் ஆண்டு விழா ஹோசபேட் நகரில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய மல்லிகார்ஜுன கார்கே,

“பாகிஸ்தான் எப்போதுமே இந்தியாவை பலவீனமாக பார்க்கிறது. சீனாவின் ஆதரவுடன் இந்தியாவுக்கு தொந்தரவு செய்ய நினைக்கிறது. இது போன்ற விஷயங்களை நம் நாடு ஒருபோதும் பொறுத்துக்கொள்ளாது. நாங்கள் இதில் ஒன்றுபட்டுள்ளோம். நாட்டை எதிர்ப்பவர்களுக்கு எதிரான போராட்டத்தில் அரசுக்கு ஆதரவை வழங்கினோம். நாடு முக்கியமானது. அதற்குப் பின்னர்தான் மதம், சாதி உள்ளிட்ட விஷயங்கள்.

கடந்த மாதம் நிகழ்ந்த பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்கு முன்னதாக ஓர் உளவுத் துறை அறிக்கையைப் பெற்ற மோடி, அதன் அடிப்படையில் தனது காஷ்மீர் பயணத்தை ரத்து செய்தார். அந்த உளவுத் தகவல் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்திருக்க மாட்டார்கள். பஹல்காமில் நிகழ்ந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் உயிரிழந்ததற்கு அங்கு மோடி அரசு பாதுகாப்பை வழங்காததே காரணம்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எம்.பிக்களின் தூதுக் குழுக்களை வெளிநாடுகளுக்கு அனுப்பும் விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி எங்களிடம் எதுவும் கேட்கவில்லை. ஒருதலைப்பட்சமாக அவர் முடிவெடுத்தார். எனினும், நாட்டின் பொருட்டு, நாங்கள் எதுவும் சொல்லவில்லை. வெளிநாடுகளுக்கு தூதுக் குழுவின் ஒரு பகுதியாக எங்கள் பிரதிநிதிகளை அனுப்புகிறோம். நாட்டைக் காப்பாற்றுவதே காங்கிரஸின் நோக்கமாகும். இந்த விஷயத்தில் கட்சி எல்லைகளை நாங்கள் பார்க்கவில்லை. பல ஆண்டுகளாக அடிமைத்தனத்தின் கீழ் இருந்த நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுத் தந்த கட்சி காங்கிரஸ். எனவே, அதைக் காப்பாற்றுவது எங்கள் கடமையாகும்.

பஹல்காம் தாக்குதல் தொடர்பாக விவாதிக்க 2 முறை அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தப்பட்டது. ஆனால், ஒருமுறை கூட அதில் பிரதமர் கலந்து கொள்ளவில்லை. இதுபோன்ற கூட்டங்களுக்கு நாங்கள் செல்லவில்லை என்றால், எங்களை தேசதுரோகிகள் என்பார்கள். ஆனால், கலந்து கொள்ளாத பிரதமர் ஒரு தேசபக்தர்.

முன்னாள் பிரதமர்களான இந்திரா காந்தியும், ராஜீவ் காந்தியும் நாட்டுக்காக தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்துள்ளனர். மகாத்மா காந்தியும் தனது வாழ்க்கையை தியாகம் செய்தார். அத்தகைய கட்சியை நீங்கள் குறை கூற முயற்சிக்கிறீர்கள். அதன் தலைவர்களுக்கு எதிராக அமலாக்கத் துறை போன்ற ஏஜென்சிகள் மூலம் வழக்குகளை பதிவு செய்கிறீர்கள். காங்கிரஸ் கட்சி ஒருபோதும் யாருக்கும் வணங்காது. நாங்கள் நாட்டுக்காக எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறோம், ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் நாட்டுக்காக போராடவில்லை. அவர்கள் நாட்டில் ஒரு தவறான செயல்களை நடத்துகிறார்கள்.” என்று குற்றம் சாட்டினார்.



# பாகிஸ்தானில் எந்த பகுதியையும் துல்லியமாக தாக்கும் திறன் இந்திய இராணுவத்துக்கு உண்டு

## இந்திய இராணுவ அதிகாரி தகவல்

பாகிஸ்தானில் எந்த பகுதியையும் துல்லியமாக சென்று தாக்கும் திறன் இந்திய இராணுவத்துக்கு உண்டு என இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் இந்திய இராணுவத்தின் வான் பாதுகாப்பு பணிப்பாளர் லெப்டினன்ட் ஜெனரல் சுமர் இவன் டிகுன்ஹா செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில்,

“பாகிஸ்தான் அச்சுறுத்தலை சமாளிக்க தேவையான தளவாடங்கள் இந்தியாவிடம கைவசமாக உள்ளன. ஒட்டு மொத்த பாகிஸ்தானும், இந்தியாவின் தாக்குதல் ‘இலக்கில்’ தான் உள்ளது.

பாகிஸ்தானின் எந்த இடத்தையும் துல்லியமாக தாக்கும் திறன் இந்திய இராணுவத்திற்கு உண்டு. ராவல்பிண்டியில் உள்ள பாகிஸ்தான் இராணுவ தலைமைகத்தை கைபர் பக்துன்க்வாவிற்கு மாற்றினாலும் ஒழிவதற்கு குழிகளை தேட வேண்டியிருக்கும்.

சமீபத்தில் ஏற்பட்ட மோதலில் 800 முதல் ஆயிரம் ட்ரோன்களை பாகிஸ்தான் ஏவியது. ஆனால், அவை பெரும்பாலும் அழிக்கப்பட்டு விட்டன.

ஆளில்லாத விமானங்களில் வெடிமருந்துகள் இருந்தது. பொது மக்கள் மற்றும் இராணுவ முகாம்கள் மீது அவற்றிற்கு குறியாக இருந்தன. ஆனால், அவற்றால் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை என்பதை நாங்கள் உறுதி செய்தோம். சாமானிய மக்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தவில்லை.” என அவர் தெரிவித்துள்ளார்.



# காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல்; 50 பேர் பலி!

காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவின் தெற்கு நகரமான கான் யூனிஸில் உள்ள பாலஸ்தீனியர்களை வெளியேறுமாறு அறிவித்ததை அடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில், காசா மீதான தாக்குதல்களை இஸ்ரேல் நிறுத்தாவிட்டால், அதற்கு எதிராகத் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கனடா, பிரான்ஸ் மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன், காசாவின் முற்றுகையிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான உதவிகளை வழங்குமாறும் இஸ்ரேலை மேற்படி நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

# காசாவில் அடுத்த 48 மணி நேரத்தில் 14,000 குழந்தைகள் உயிரிழக்கலாம்!

## ஐ.நா. எச்சரிக்கை





காசாவில் மனிதாபிமான உதவிகள் போதிய அளவில் வழங்கப்படாவிட்டால், அடுத்த 48 மணி நேரத்தில் 14, 000 குழந்தைகள் உயிரிழக்க நேரிடலாம் என ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானத் தலைவர் டாம் ஃபிளெட்சர் எச்சரித்துள்ளார்.

பிரபல சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது காசா மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவுப்பொருள்கள் முறையாக அவர்களை வந்தடைவதில்லை எனவும் அவ்வாறு கிடைக்கும் உதவிகள் மூலம் காஸா மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காஸாவிலுள்ள தாய்மார்கள் ‘ தங்கள் குழந்தைகளை உணவளிக்க முடியாமல் தவிக்கிறார்கள் எனவும் இதனால் அடுத்த 48 மணி நேரத்தில் 14, 000 குழந்தைகள் உயிரிழக்கும் அபாயத்தில் உள்ளனர் எனவும் இந்த பேரழிவைத் தவிர்க்க, உடனடி மற்றும் அதிகளவிலான மனிதாபிமான உதவிகள் அவசியம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும்,காஸாவில் உள்ள பல மருத்துவமனை மருத்துவ வசதிகள் இன்றி செயலிலந்து காணப்படுவதாக தெரிவித்த அவர், உணவு, மின்சாரம் மற்றும் சுகாதார வசதிகள் போதிய அளவில் இல்லாத காரணத்தினால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -21.05.2025




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதைதவிர்க்கவேண்டும்.உங்கள்நடவடிக்கைகளில் கவனம் தேவை. இன்று உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

உங்கள் சகபணியாளர்களுடன் சச்சரவுகள் ஏற்படலாம். பொறுமையுடன் இருந்து செயலாற்றவும்.

தொடர்பாடலில் உள்ள குறைபாடு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். புரிந்துணர்வு மூலம் இதனைத் தவிர்க்கலாம்.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

உங்களுக்கு கால்வலி ஏற்பட வாய்ப்புள்ளது. உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவனமாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது.




இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடவேண்டும். அது உங்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும்.

உங்கள் பணிகளை திறம்படச் செயலாற்றுவீர்கள். அதே சமயத்தில் வேலையின் தொடக்கத்தில் சில தடைகளை எதிர்கொள்வீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. துணையிடம் அன்பான உரையாடல்களில் ஈடுபடலாம்.

உங்கள் தேவைகளுக்கு கடன் வாங்க நேரலாம். அதன் மூலம் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

உங்கள் தோள்களில் வலி ஏற்படலாம். செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. முறையான உணவு முறை மேற்கொள்ளவும்.




இன்று நீங்கள் சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். பொறுப்புகள் காணப்படும். இன்று செய்யும் செயல்களை சரியாக திட்டமிட்டுச் செய்தால் நீங்கள் வெற்றி காணலாம்.

பணி நிமித்தமான பயணங்கள் காணப்படும். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாளாக இருப்பதாக உணர்வீர்கள். உங்கள் துணையிடம் உங்கள் நேரத்தை பகிர்ந்து கொள்வீர்கள்.

குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரலாம். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

உங்கள் குழந்தைகளுக்கு ஆரோக்கிய பிரச்சினை காணப்படும். அதற்காக செலவு செய்ய நேரும்.




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும்.குழப்பங்களும் கவலைகளும் நிறைந்திருக்கும். இன்று சிறந்த பலன்கள் கிடைப்பதற்கு உகந்த நாள் அன்று.

இன்று பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணி நிமித்தமான பயணம் இன்று காணப்படும். உங்கள் வேலைகளை திட்டமிடுவது இன்று முக்கியம்.

இன்று உணர்ச்சி வசப்படுவீர்கள். பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்த வேண்டும்.

நிதி நிலைமை நீங்கள் எதிர்பார்த்தது போலன்றி எதிர்மறையான பலன்களைத் தரும்.

உங்களிடம் காணப்படும் பதட்டம் காரணமாக உங்களுக்கு கால் வலி ஏற்படலாம்.




இன்று சாதகமான நாள். உங்களின் முயற்சி சிறியதாக இருந்தாலும் வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும்.

இன்று பணியிடத்தில் திருப்திகரமான நிலை இருக்கும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். இன்று நீங்கள் விரைந்து செயலாற்றுவீர்கள். இன்று பணியில் சவால்களும் போட்டிகளும் நிறைந்து காணப்படும். இந்தச் சவால்களைத் திறமையாக சமாளிக்க வேண்டிய நிலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். சேமிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்வது நல்லது.

இன்று சிறந்த முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.




இன்று நீங்கள் பயணங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும். புதிய முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் மனநிலையில் இருப்பீர்கள்.

இன்று பணி நிமித்தமான பயணம் காணப்படும். உங்கள் பணியில் அதிக கவனம் செலுத்த வேண்டும். விடாப்பிடியான எண்ணம் கொண்டு எந்த முயற்சியும் செய்யாதீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உறவில் நல்லிணக்கம் இருக்கும்.

இன்று அதிர்ஷ்டம் காணப்படும். நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உணவில் கவனம் செலுத்த வேண்டும். உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் -21.05.2025




இன்று மந்தமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாளாக அமையாது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை இன்று தள்ளிப்போட வேண்டும்.

உங்கள் பணியின் தரம் பாராட்டத்தக்க வகையில் இருக்காது. பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உறவில் மகிழ்ச்சியை பராமரிக்க அனுசரித்து நடந்து கொள்ளவும். இதனால் உறவில் நல்லிணக்கத்தை தக்க வைக்க முடியும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. இன்று வரவும் செலவும் சேர்ந்து காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள். இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளைத் திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு உகந்த நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கான முக்கியமான முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை திறம்பட செயலாற்றுவீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று காதலில் முழு திருப்தி உண்டாவதற்கு உகந்த நாள். இன்று காதலில் புதிய அத்தியாயத்தை தொடங்குவீர்கள்.

நீங்கள் தொழில் செய்பவராக இருந்தால் இன்று அதிக லாபம் கிடைக்கும்.

நீங்கள் ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். உடற்பயிற்சி மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு மகிழ்ச்சியையும் மன ஆறுதலையும் தரும்.

பணி நிமித்தமான பயணங்கள் இன்று காணப்படும். பணியில் இன்று மும்மரமாக காணப்படுவீர்கள்.

இன்று காதலுக்குப் பொருத்தமான நாளாக உணர்வீர்கள். உங்கள் காதலை உங்கள் தந்தையிடம் கூறுவீர்கள். அது உங்களுக்குச் சாதககமாக இருக்கும்.

ஏழைகளுக்கு தொண்டு செய்து அவர்கள் ஆசி பெறுவதன் மூலம் உங்களுக்கு நற்பலன்கள் கிடைக்கும். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.



# பல நாள் சைக்கிள் கள்வன் யாழ் நகரில் நேற்றுக் கைது

## மொத்தம் 16 சைக்கிள்கள் மீட்பு

யாழ்ப்பாணத்தில் நீண்ட நாளாக பல்வேறு சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

அந்த நபரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது 16 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

குருநகர் பகுதியைச் சேர்ந்த 40 வயது மதிக்கத்தக்க ஒருவரே யாழ் மாவட்ட குற்ற தடுப்பு பிரிவு பொலிஸாரால் இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஒரு சைக்கிளும் அவரது உடைமையில் இருந்து ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டது.

தொடர்ச்சியாக நடத்தப்பட்ட விசாரணைகளின் போது சில மாதங்களாக நல்லூர், யாழ்நகரபகுதி, கே.கே.எஸ்.வீதி போன்ற இடங்களிலிருந்து திருடப்பட்ட ஆண்கள் பயன்படுத்தும் ஐந்து சைக்கிள்களும் பெண்கள் பயன்படுத்தும் 11 சைக்கிள்களும் என 16 சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபரை யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சைக்கிள்களைத் தொலைத்த உரிமையாளர்கள் இருப்பின் தகுந்த அடையாளங்களைக் காண்பித்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.